அந்தரங்கமானது

விடைத்தாள் புள்ளியிடும் பரீட்சகர்களுக்கு மாத்திரம்


015


## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்


# மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை - 2022

## விடைத்தாள் புள்ளியிடலுக்கான அறிவுறுத்தல்களும் புள்ளி வழங்கும் திட்டமும்


## பத்திரம் II











முழுப் பதிப்புரிமையுடையது

செம்மையாக்கம் செய்யப்பட்டவுள்ள பிரதி

# மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

## பத்திரம் II

## விடைத்தாள் புள்ளியிடுவதற்காக அறிவுறுத்தல்களும் புள்ளி வழங்கும் திட்டமும்

### 01. விடைத்தாள்களை புள்ளியிடலில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

1.1 சகல வினாக்களினதும் விடைகளுக்கெதிரே சரியாயின் "✓" என அடையாளமிட்டு அதற்குரிய புள்ளிகளையும் பிழையாயின் " ×" என அடையாளமிட்டு 00 எனவும் வலது பக்கக் கோட்டிற்கு வெளியே தெளிவாகக் குறிப்பிடவும்.

1.2 ஒவ்வொரு பக்கத்திற்குமுரிய சரியான விடைகளுக்குரிய புள்ளிகளின் மொத்தத் தொகையை வலது பக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்ட கூட்டினுள் இரு இலக்கங்களினால் குறிப்பிடவும்.

1.3 ஒவ்வொரு பக்கத்திலும் குறிப்பிட்டுள்ள மொத்தப் புள்ளிகளை முன்பக்கத்திலுள்ள குறித்த பக்க எண்ணுக்கு எதிரே உள்ள கூட்டினுள் தெளிவாக எழுதவும்.

1.4 முழு விடைத்தாளையும் கவனத்தில் கொண்டு கையெழுத்து, இலக்கங்கள் போன்றவை தெளிவாகவும் சரியாகவும் எழுதப்பட்டிருப்பின் மேலதிகமாக 02 புள்ளிகள் வழங்குக. கையெழுத்து தெளிவற்றிருப்பினும் சரியாக எழுதப்பட்டிருப்பின் 01 புள்ளி வழங்குக. அப்புள்ளியை +02 அல்லது +01 அல்லது +00 என 8 ஆவது பக்கத்தில் எழுதப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளுக்கு எதிரில் இடவும். அவ்வாறே முதல் பக்கத்தில் 08 ஆவது பக்கத்திற்குரிய புள்ளிகளை குறிப்பிட்ட இடத்தில் +02 அல்லது +01 அல்லது +00 என மேலதிக புள்ளிகளை எழுதுக. (+02 அல்லது +01 என புள்ளி வழங்காது விடின் +00 எனக் குறிப்பிடுக.)

1.5 இறுதிப்புள்ளிகளை இலக்கத்திலும் எழுத்திலும் அதற்குரிய கூட்டினுள் தெளிவாக எழுதவும்.

### 02. புள்ளி வழங்குவது தொடர்பான சுருக்க விபரம் :

2.1 வினா இல 1 இலிருந்து வினா இல 14 வரையுள்ள எல்லா பகுதிகளுக்கும் சரியான விடை எழுதியிருப்பின் 01 புள்ளி வீதம் வழங்குக.

2.2 வினா இல. 15 இலிருந்து வினா இல 29 வரையான வினாக்களின் ஒவ்வொரு பகுதியின் சரியான விடைக்கும் 02 புள்ளி வீதம் வழங்குக.

2.3 வினா இல. 30 தொடக்கம் 59 வரை சரியான விடைக்கு 01 புள்ளி வீதம் வழங்குக.

2.4 வினா இல. 60 இன் ஒரு வாக்கியத்திற்கு 02 புள்ளிகள் வீதம் வழங்குக.

2.5 வினா இல 1 தொடக்கம் 09 வரையில் ( வினா இல 2,3 மற்றும் வினா இல 5 ஐத் தவிர ) மற்றும் 60 ஆகிய வினாக்களுக்கான விடைகளில் எழுத்துப்பிழை இருத்தல் கூடாது.

2.6 வினா இல 10 இற்கான விடைகளில் எழுத்துப்பிழைகள் இருப்பின் புள்ளி வழங்க வேண்டாம். ஆங்கில பேரெழுத்துக்கள், சிற்றெழுத்துக்கள் மாறி மாறி எழுதியிருப்பினும் புள்ளிகள் வழங்குக.

2.7 சரியான விடையின் கீழ்க் கோடிடுக என அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பினும் சரியான விடையினை ஏதாவதொரு முறையில் அடையாளப்படுத்தப்பட்டிருப்பினும் புள்ளி வழங்குக.

Past Papers Wiki

**விபரப் புள்ளித்தாளைத் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியவை**

3.1 புள்ளித்தாளில் "Total Marks" எனும் நிரலினை புள்ளிகளைப் பதியப் பயன்படுத்தவும்.

3.2 அந்நிரலில் ஒவ்வொரு பரீட்சார்த்தியினதும் சுட்டெண்ணுக்கு எதிரே அவ்விடைத்தாளுக்குரிய இறுதிப் புள்ளியை குறிப்பிடவும்.

3.3 இறுதிப் புள்ளியை எதிரே இரு நிரல்களை விட்டு தெளிவான எழுத்தில் எழுதுக.

3.4 புள்ளித் தாளை பூரணப்படுத்தும்போது எவையேனும் பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தெளிவாகத் தனிக்கோடொன்றால் வெட்டிவிட்டு எதிரே மீண்டும் எழுதி பதிந்த மற்றும் பரீட்சித்த பரீட்சகர்கள் இருவரும் சிற்றொப்பம் இட வேண்டும்.

3.5 புள்ளிகள் திருத்தி எழுதப்பட்ட இடங்களில் விடைத்தாள் பரீட்சகர் 1, 2 ஆகிய இருவரும் சிற்றொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

3.6 புள்ளிகள் வெட்டி திருத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புள்ளித்தாளும் விடைத்தாளும் பிரதம பரீட்சகரிடம் காட்டப்பட்டு, அவரின் ஒப்பம் திருத்தப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் பெறப்பட வேண்டும்.

3.7 அத்துடன் செய்யப்பட்ட திருத்தம் விபரப் புள்ளித்தாளின் மறுபக்கத்தின் அடியில் உள்ள "குறிப்புக்கள்" என்ற இடத்தில் எழுதப்பட்டு பரீட்சகர்கள் இருவரினதும் முழு ஒப்பம் இடப்பட வேண்டும்.


3.8 ஒவ்வொரு புள்ளித்தாளிலும் புள்ளிகளைப் பதிந்தவர் ஒப்பமிடுவதும் அவ்விபரப் புள்ளித்தாளை விடைத்தாள்களுடன் ஒப்பிட்டுப் பரீட்சித்தவரும் புள்ளிகளை உறுதிப்படுத்துத்தும் எண்கணிதப் பரீட்சகரும் ( EMF ) பிரதம பரீட்சகரும் அவரவருக்குரிய இடத்தில் ஒப்பமிட்டு, குறியீடெண்ணையும் இட வேண்டியது கட்டாயமானதாகும்.


| |
|---|
| விடைத்தாளுக்குப் புள்ளியிடும்போதும் விபரப் புள்ளித்தாளைப் பூரணப்படுத்தும் போதும் தூய்மை, தெளிவு, நேர்மை, நடுநிலைமை என்பன பேணப்படுவது அவசியமாகும். |

| |
|---|
| விடைத்தாளில் அல்லது புள்ளிவிபரப்படிவத்தில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட வேண்டுமாயின், அது முதலாம் பரீட்சகர் மூலமாகவே செய்யப்பட வேண்டும். ஆயினும் அவையெல்லாம் பிரதான பரீட்சகரின் அனுமதியுடன் செய்யப்பட்டுள்ளன எனக் காட்டுவதற்கு பிரதான பரீட்சகரின் கையொப்பமும் அத்துடன் எண்கணித பரீட்சகர், விடைத்தாள் பரீட்சகர், இரண்டாம் பரீட்சகர் ஆகியோரின் சிற்றொப்பங்களும் இடப்படல் வேண்டும். |



# பத்திரம் II

## புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | (i) அருணன் /அருணனால் | 01 |
| | (ii) அருணன் தரம் ஒன்றிற்குச் சென்ற நாளை நினைவுபடுத்துவதற்காக / நினைவுபடுத்துவதற்கு / நினைவுபடுத்த / அருணன் ஐந்து வருடங்களுக்கு முன்னர் தரம் ஒன்றிற்கு சென்ற நாளை நினைவுபடுத்த | 01 |
| | (iii) அம்மா, அப்பா, அக்கா மற்றும் அருணன்<br>(ஒழுங்கு மாறி எழுதியிருப்பினும் புள்ளி வழங்குக.) | 01 |
| | (iv) அருவியின் பக்கமாக வளைந்திருந்த /வளைந்திருந்தது / வளைந்திருந்ததாக<br>(வீட்டின் அருகில் ஓடுகின்ற அருவியின் பக்கமாக வளைந்திருந்த) | 01 |
| | (v) மரக்கன்றுகளை நடுதலும் அதனைப் பராமரித்தலும்<br>( அருணனைப்போல வகுப்பிலுள்ள ஏனையவர்களும் மரக்கன்றுகளை நடுதலும் பராமரித்தலும்) | 01 |
| | (vi) ஆனந்தம் | 01 |
| 2 | (i) ✓ | 01 |
| | (ii) × | 01 |
| | (iii) ✓ | 01 |
| | (iv) × | 01 |
| | (v) ✓ | 01 |
| 3 | (2) இருந்தது | 01 |
| 4 | • எங்கள் வீடு அமைந்துள்ள காணியில் அலங்காரமான தாவரங்கள் உள்ளன.<br>• அலங்காரமான தாவரங்கள் எங்கள் வீடு அமைந்துள்ள காணியில் உள்ளன.<br>• எங்கள் அலங்காரமான வீடு அமைந்துள்ள காணியில் தாவரங்கள் உள்ளன. | 01 |
| 5 | (i) ② கறிவேப்பிலை<br>(ii) ① விளையாட்டு | 01<br>01 |
| 6 | • காலையில் உழவர்கள் எருதுகளுடன் வயலுக்குச் செல்கின்றனர். | 01 |
| 7 | • முடிவு | 01 |
| 8 | • அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் | 01 |
| 9 | நபரின் பெயர்: (i) குகன்<br>பிராணியின் பெயர்: (ii) பசுக்கன்று<br>பொருளின் பெயர்: (iii) வாளி / தண்ணீர்<br>இடத்தின் பெயர்: (iv) பாடசாலை /வீடு | 04 |
| 10 |  (i) G o a t<br> (ii) K e t t l e<br>சிற்றெழுத்துக்கள், பேரெழுத்துக்கள் மாறி மாறி எழுதியிருப்பினும் புள்ளி வழங்குக. | 01<br>01 |

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 11 | (i) My pencil is on the table<br>(ii) I play with my friends<br>(பிரதி செய்து எழுதுவதால் பிழையின்றி எழுத வேண்டும்) | 01<br>01 |
| 12 | (i) சீனி<br>(ii) வானவில் | 01<br>01 |
| 13 | • தாமரைப் பூ | 01 |
| 14 | • மட்ட போலயக் தென்ன / தென்ட<br>மட்ட போலய தென்ன / தென்ட | 01 |
| 15 | ஐம்பத்தோராயிரத்து முப்பது / ஐம்பத்து ஓராயிரத்து முப்பது | 02 |
| 16 | 7595, 9575 | 02 |
| 17 | 15037, 25791, 25971 | 02 |
| 18 | 27, 33<br>(★ ஒரு விடை சரியாயின் 01 புள்ளி வழங்குக.) | 02 |
| 19 | 15 : 30 | 02 |
| 20 | 720 / எழுநூற்று இருபது | 02 |
| 21 | 35 / முப்பத்தைந்து | 02 |
| 22 | 2 / இரண்டு / $^2/4$ / நான்கில் இரண்டு பங்குகள் | 02 |
| 23 |  ★ உரு முறிவுக்கோடுகளால் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக. | 02 |
| 24 | 7 800 | 02 |
| 25 | 7 800 | 02 |
| 26 | 5 150 | 02 |
| 27 | 1 50 | 02 |
| 28 | 165 50 | 02 |
| 29 | (i) முச்சக்கர வண்டி<br>(ii) இரண்டு, 2 | 02<br>02 |
| 30 | (3) எருக்கலை | 01 |
| 31 | (2) மயில் | 01 |

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 32 | (1) சாரணைக்கீரை | 01 |
| 33 | (1) காலை உணவு வேளை | 01 |
| 34 | (2) ஆதர் சீ கிளார்க் | 01 |
| 35 | (2) கிராம அதிகாரி | 01 |
| 36 | (1) குதி, பாதம், விரல் நுனிகள் | 01 |
| 37 | (1) நீரிழிவு | 01 |
| 38 | (3) நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை | 01 |
| 39 | (2) மணலினுள் புதைத்தல் | 01 |
| 40 | (1) வடக்கு - தெற்கு | 01 |
| 41 | (2) நீரில் மிதக்கும் | 01 |
| 42 | 01 புள்ளி வழங்குக. ✓ Full mark | 01 |
| 43 | (1) நியம குறியீட்டு முறை மூலம் காட்டுதல் | 01 |
| 44 | (2)<br>நன்மையளிப்பது: • மண்புழு • தேனீ<br>தீமையளிப்பது: • வெண்மூட்டைப் பூச்சி | 01 |
| 45 | (2) வைரஸ் மூலம் | 01 |
| 46 | (3) கொல்லன் பட்டறைத் தொழில் | 01 |
| 47 | (2) புகையிரதப் பாதை | 01 |
| 48 | (3) அவற்றின் உற்பத்தி, காலாவதி பற்றிய திகதிகள் குறிப்பிடப்பட்டிருத்தல் | 01 |
| 49 | (1) நச்சுத் தன்மை அற்ற விளைச்சலைப் பெறுதல் | 01 |
| 50 | (2) நோய்க்காவி நுளம்பு மூலமாகும். | 01 |
| 51 | (3) கட்டடத்தின் உள்ளே தங்கியிருத்தல் | 01 |
| 52 | (3) ஒருவர் மற்றையவர்களின் கருத்துக்களைச் செவிமடுத்துத் தமது கருத்துக்களை வெளிப்படுத்துதல் | 01 |

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 53 | (2)  | 01 |
| 54 | (1)   | 01 |
| 55 | (2) வாழை இலையைக் கழுவி மிதமான நெருப்பில் சூடாக்குதல் | 01 |
| 56 | (2) எரிகாயம் ஏற்பட்ட இடத்தில் வழிந்து செல்லுமாறு தண்ணீர் ஊற்றுதல் | 01 |
| 57 | (1) நாகமரம், காட்டுக் கோழி | 01 |
| 58 | (2) கம்பளித் தையல் | 01 |
| 59 | (3) 1990 | 01 |
| 60 | **ஒவ்வொரு சரியான வாக்கியத்திற்கும் (02) புள்ளிகள் வீதம் வழங்குக.**<br>i. சரியான 03 வாக்கியங்களுக்கு 02 புள்ளிகள் வீதம் (02 × 03) 06 புள்ளிகள் வழங்குக.<br>ii. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து (05) சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.<br>iii. எல்லா வாக்கியங்களிலும் எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியானதாக இருத்தல் வேண்டும்.<br>iv. எழுத்துப் பிழைகள் இல்லாதிருத்தல் வேண்டும்.<br>v. சம்பவத்திற்குப் பொருத்தமானதாக எழுதப்பட்ட வாக்கியங்களாக அமைதல் வேண்டும்.<br>vi. எழுத்து வழக்கில் அமைந்த வாக்கியங்களாக இருத்தல் வேண்டும்.<br>vii. வாக்கியத்தின் கருத்து தெளிவாக வெளிப்படல் வேண்டும்.<br>viii. ஒரே கருத்துடைய வாக்கியத்தை மீண்டும் எழுதியிருப்பின் புள்ளி வழங்க வேண்டாம்.<br>ix. வாக்கியங்கள் நிகழ்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.<br>▪ **வாக்கியத்திற்கு ஒரு புள்ளி வழங்குவதற்கான அறிவுறுத்தல்**<br>வாக்கியமொன்றில் ஓர் எழுத்துப் பிழை மட்டும் இருப்பின் 01 புள்ளி மட்டும் வழங்குக.<br>ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகளிருப்பின் புள்ளி வழங்க வேண்டாம்.<br><br>1 - 14 - 30 புள்ளிகள்<br>15 - 29 - 32 புள்ளிகள்<br>30 - 59 - 30 புள்ளிகள்<br>60 - 06 புள்ளிகள்<br>மேலதிக புள்ளிகள் - 02 புள்ளிகள்<br>மொத்தப்புள்ளிகள் - 100 புள்ளிகள் | 2 × 3 = 6 |

# தெரிவு செய்யப்பட்ட வாக்கியங்கள்

1. நான் எனது நண்பர்களுடன் சேர்ந்து மரத்தைத் தள்ள முயற்சிப்பேன்
2. நான் முதலில் மரத்தின் சிறிய பகுதிகளை அகற்ற முயற்சிப்பேன்.
3. நானும் எனது நண்பர்களும் மரத்தைத் தூக்க முயற்சி செய்வோம்.
4. நானும் எனது நண்பர்களும் கீழே விழுந்து கிடக்கும் மரத்தைக் கண்டு கவலைப்படுவோம்.
5. பாடசாலைக்கு எப்படிச் செல்வது என்று நான் பலமாக யோசிப்பேன்.
6. நானும் எனது நண்பர்களும் ஒற்றுமையாகச் சேர்ந்து அந்த மரத்தை என்ன செய்வதென்று சிந்திப்போம்.
7. நானும் எனது நண்பர்களும் மரத்தை கைகளால் உருட்ட முயற்சிப்போம்
8. நானும் எனது நண்பர்களும் அம் மரத்தை வீதி ஓரத்தில் தள்ளிவிட முயற்சிப்போம்.
9. நான் அந்த மரத்தை வீதியின் ஓரத்திற்கு இழுத்துச் செல்ல முயற்சிப்பேன்.
10. அக்கம் பக்கத்தில் ஒருவரும் இல்லாதபடியால் எனது பெற்றோரிடம் சென்று முறையிடுவேன்
11. அதனைக் கேட்டு எனது பெற்றோர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

12. நானும் எனது நண்பர்களும் சேர்ந்து அம் மரத்தை அகற்ற முயற்சிப்போம். ✓

13. அந்த மரம் மிகவும் பெரிதாக உள்ளதால் எங்களால் அதனைத் தூக்க முடியாமல் போகலாம். ×

14. நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்ல முடியாது போய் விடுமோ என்று நான் சிந்தித்தேன். ×

15. நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து மரத்தை விரைவாக தள்ள முயலுவோம் ✓

16. நாங்கள் நடந்தவற்றைக் கூறி ஆசிரியரின் பாராட்டைப் பெற முயலுவோம். ✓

17 நடந்தவற்றை ஆசிரியரிடம் விளக்கமாகக் கூறி பாராட்டைப் பெறுவோம். ×

18. நான் முதலில் மரத்தின் சிறிய பகுதிகளை அகற்றுவேன் ✓

19. நண்பர்களின் உதவியுடன் மரத்தை சிறிது தூரம் அசைத்து வைப்போம். ×

20. விழுந்து கிடக்கும் மரத்தின் மேலால் ஒவ்வொருவராக உதவி செய்து ஏறுவோம். ✓

21. நானும் நண்பர்களும் சேர்ந்து மரத்தை சிறிதாவேனும் அசைத்துப் பார்ப்போம் ✓

22. நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்ல முடியாது போய் விடுமோ என்று நான் சிந்தித்தேன். ×

23. அந்த மரத்தை என்னால் அகற்ற முடியாது என்று நண்பர்கள் கூறினர் ×

24. அதன் பின்னர் புத்தகப் பையையும் எடுத்துக் கொண்டு குறுக்கு வழியால் பாடசாலைக்குச் சென்றேன். X

25. முறிந்த மரத்திற்கு மேலால் பாய்ந்து செல்ல முயற்சிப்பேன் X

26. நாம் அனைவரும் எப்படியாவது பாடசாலை செல்ல வேண்டும் என முடிவெடுப்போம் X

27 நான் முதலில் அந்த மரத்தைத் தாண்டிச் செல்வது எப்படி எனச் சிந்திப்பேன் X

28. அவ்வாறு தாண்ட முடியாமல் போனால் வீடுகளுக்கு சென்று பெற்றோரை அழைத்து வருவோம் X

29. வேறு எவரும் இல்லை என்பதால் அம் மரத்தை வேறு ஓரிடத்தில் நகர்த்த முடிவெடுத்தேன். X

30 வீதியின் அருகில் வீடொன்று இருந்தால் வீட்டில் வசிப்பவர்களை அழைப்போம். X

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න